**STC.NO.403/2021 PW-1**

நாள் : 07.10.2024

பெயர் : பாலசந்திரன்

த/பெ : திருவேங்கடம்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்சி**

வழக்கு காசோலையானது (ம.சா.ஆ.1) உங்களுக்கு வெத்து காசோலையாக தான் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. எதிரி உங்களுக்கு கொடுத்த காசோலை இது தானா என்று ம.சா.ஆ.1 காசோலையை காண்பித்து எதிரி தரப்பு வழக்கறிஞர் வினவிய போது அதை சாட்சி ஏற்றுக்கொள்கிறார். எந்த தேதியில் காசோலை கொடுக்கபட்டது என்றால் 20.02.2021 அன்று கொடுக்கப்பட்டது. அந்த தேதியில் எதிரி காசோலை கொடுக்கவில்லை அவர் கையெழுத்து செய்து கொடுத்தார் நீங்களாகவே தேதி மற்றும் காசோலை விவரங்களை பூர்த்தி செய்து கொண்டிர்கள் என்றால் சரியல்ல.

காசோலை கையெழுத்தில் உள்ள பேனா மையும் காசோலையில் காணப்படும் மற்ற விவரங்களில் உள்ள பேனா மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது அவர் தான் கொடுத்தார். காசோலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்றால் ரூ.22,84,000 ஆகும். நீங்கள் எதிரிக்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்றால் ரூ.19,15,000 ஆகும். வழக்கு காசோலை எண் தெரியுமா என்றால் தெரியும் காசோலை எண் 832044 ஆகும். அசலான ரூ,19,15,000 யை தவிர்த்து மீத தொகையை வட்டியாக சேர்த்துக்கொண்டேன்.

புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் பாலசந்தர் என்று உங்கள் பெயர் உள்ளது என்றால் ஆமாம் நான் அதை நீதிமன்ற அனுமதியுடன் மனு செய்து பெயரை திருத்தம் செய்து கொண்டேன். உங்கள் பெயர் பாலசந்திரன் என்பதுக்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம். உங்களிடம் எதிரி கடனாக பெற்றது ரூ.1,75,000 தான் என்றால் இல்லை. அதற்காக தான் காசோலை கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. நீங்களும் எதிரியும் தொழில் செய்துள்ளீர்கள் அதில் நட்டம் ஏற்பட்டு விட்டது உங்களுக்கு சேர வேண்டிய தொகைக்காக வழங்கப்பட்ட காசோலையை நீங்கள் தவறாக பயன்படுத்தியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. காசோலையை நீங்களாகவே தவறான நோக்கத்துடன் பூர்த்தி செய்துக்கொண்டிர்கள் என்றால் சரியல்ல. எனவே தவறாக பூர்த்தி செய்யப்பட்ட காசோலையின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காசோலை வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- **********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.